வேலூர் மாவட்டம் கணியம்பாடி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை.திருமதி.ர.செல்வி

ந.க.எண். /2023

நாள்.02/04/2024

அய்யா

பொருள் ; மனைப்பிரிவு – உள்ளாட்சிகளில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் அளித்தல் – கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம் – கணியம்பாடி ஊராட்சி – திரு.எம்.சசிகுமார் மற்றும் 2 நபர்கள் என்பவரின் சர்வே எண். 87/1,2,3B, 89/2, 90/2, 3A,3B 4A, 4B, 5B, 6 & 90/7B 7A, 8–ல் 23540.00 ச.மீ அல்லது 5.815 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு புதிய மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் சார்பாக.

பார்வை : 1).நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் வேலூர்–1 அவர்களின் ந.க.எண்.VLR/4NNYLB82/016–2024 மற்றும் ம.வ./மா.ந.ஊ.அ.(வேமா) எண்.10/2024

2),அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3) துறை நாள்.04/05/2017

3).ஆய்வுக்கட்டணம் கணியம்பாடி ஊராட்சிக்கு செலுத்திய தொகை ரூ.135000/– நாள்.13.03.2024

4).நிலப்பயன் மாற்றக்கட்டணம் ரூ.236002/– (DPC 0217 60 800 AS 22709) என்ற அரசு கணக்கில் செலுத்திய ரசீது எண்.20240402005304 நாள்.02–04–2024

5).கணியம்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண்.489 நாள்.11/3/2024

உத்தரவு

பார்வை 1–ல் குறிப்பிட்டுள்ள வேலூர் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கணியம்பாடி ஊராட்சி கிராமம் திரு.எம்.சசிகுமார் மற்றும் 2 நபர்கள் என்பவரின் சர்வே எண். 87/1,2,3B, 89/2, 90/2, 3A, 3B 4A, 4B, 5B, 6 & 90/7B 7A, 8–ல் 23540.00 ச.மீ அல்லது 5.815 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும், மின்சார டிரான்ஸ்பார்மர் அமைக்கவும் தான பத்திர ஆவண எண்.273 /2024 நாள்.12/02/2024–க்கு மூலம் மேற்பார்வை பொறியாளர் TANGEDCO சாத்துமதுரை அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு ஊராட்சி மன்றத்தலைவர் கணியம்பாடி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் விற்பனை செய்யப்படவுள்ள கீழ்குறிப்பிட்டுள்ள 135 மனைகளுக்கு நிலப்பயன் மாற்றம் கட்டணங்கள் பார்வை (3) மற்றும் பார்வை (4)–ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தின்படி உரிய அரசு தலைப்புகளில் செலுத்தி அதற்கான இரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்தும், அரசாணைகள் 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள்.4/5/2017, பார்வை (5)–ல் குறிப்பிட்டுள்ள கணியம்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண்.489 நாள்.11/3/2024–ன்படி கீழே குறிப்பிட்டுள்ள உத்தேச குடியிருப்பு 135 மனைகளுக்கு அங்கீகாரம் அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகின்றது.

உத்தேச குடியிருப்பு விற்பனை செய்யவுள்ள மனை எண்கள் விவரம் :

மனை எண்.1 முதல் 135 வரை

R. செல்வி

தலைவர்

கணியம்பாடி ஊராட்சி

கணியம்பாடி, வேலூர் மாவட்டம்

நகல் ; திரு.எம்.சசிகுமார் மற்றும் 2 நபர்கள்

சப்தலிபுரம் கிராமம் டி.பி.எஸ் அஞ்சல் வேலூர் மாவட்டம்.

நகல் : சார் பதிவாளர் சார்பதிவாளர் அலுவலகம் கணியம்பாடி.

நகல் : நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் வேலூர்–1